# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 13

**அர. சக்கரபாணி**
உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 1 – 43 |
| 2 | நுகர்வோர் பாதுகாப்பு | 44 – 57 |
| 3 | விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 58 – 60 |
| 4 | அமலாக்கம் - குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை | 61 – 65 |
| 5 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 66 – 104 |
| 6 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 105 – 113 |
| | முடிவுரை | 114 – 115 |

## இயல் –1

## உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

**முன்னுரை**

**ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவா ராற்றலிற் பின்**

**திருவள்ளுவர்**

**1.1** தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற தமிழ்நாடு அரசின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் இந்திய துணைக் கண்ட அளவில் தனித்தன்மைமிக்கது. தமிழ்நாட்டில் வாழும் குடிமக்கள் அனைவரும் பாதுகாப்பான, ஊட்டச்சத்து நிறைந்த உணவினை எளிதில் போதிய அளவில், பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முக்கியப் பங்காற்றுகிறது

1.2 தமிழ்நாடு அரசின் உணவுக் கொள்கை உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடும் நோக்கில் உணவு தானியக் கொள்முதல், பாதுகாப்பான சிறந்த முறையில் சேமிப்பு, முறையான அங்கீகாரம் மூலம் சீரிய முறையில் இன்றியமையாப் பண்டங்களை அனைவருக்குமான பொது விநியோகத்திட்டத்தின் மூலம் வழங்குதல் மற்றும் இன்றியமையாப் பண்டங்களின் விலையேற்றத்தடுப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளல் ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டுள்ளது.

1.3 நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளில் இருந்து நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுப்பது இத்துறையின் மற்றொரு முக்கியமான செயல்பாடாகும். நுகர்வோர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் மூலம் பயனுள்ள சட்டத் தீர்வுகளை

வழங்குதல் ஆகியவை அரசின் நுகர்வோர் நலக் கொள்கையில் முக்கியமானவையாகும்.

1.4 **பொது விநியோகத் திட்டம்** : மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் 2001-ஆம் ஆண்டில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு குடிமகனுக்கும் உணவு பெறும் உரிமையை அளிக்கின்றது என்று பிறப்பித்த தீர்ப்பிற்கும் அதன் தொடர்ச்சியாக, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அறிமுகப்படுத்தப்படுவதற்கும் முன்பாகவே உணவுப் பற்றாக்குறை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுக்க, கடந்த 50 ஆண்டுகளாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

1.5 தமிழ்நாடு அரசின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம், பொருளாதார மற்றும் சமூக

வேற்றுமையின்றி ஊட்டச்சத்துடன் கூடிய உணவுப் பாதுகாப்பை அனைவருக்கும் வழங்கியுள்ளது. குடும்ப அட்டைதாரர்களுக்கு, வழக்கமாக வழங்கப்படும் உணவு தானியங்களான அரிசி மற்றும் கோதுமையுடன் சர்க்கரை, துவரம் பருப்பு, பாமொலின் எண்ணெய் ஆகியவையும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன. தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 2 கிலோ வீதம் அரிசிக்குப் பதிலாக கேழ்வரகு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.6 **நியாய விலைக் கடைகள்**: பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்களைச் சேமிக்க குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்வதில், நியாய விலைக் கடைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் நியாய

விலைக் கடைகள் மற்ற மாநிலங்களைப் போல தனியாரால் நடத்தப்படாமல் பொது அமைப்புகளால் நடத்தப்பட்டு வருகின்றன. பெரும்பாலான நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும் நடத்தப்படுகின்றன. சமவெளிப்பகுதியில் வசிப்பவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து 1.5 கிலோ மீட்டருக்கு மிகாமலும், மலைப்பாங்கான பகுதிகளில் வசிப்பவர்கள் 1 கிலோ மீட்டருக்கு மிகாமலும் சென்று பொருட்கள் வாங்கும் வகையில் நியாயவிலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தொலைதூர மற்றும் அணுக முடியாத மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இன்றியமையாப் பண்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய சிறப்புக்

கவனம் செலுத்தப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குரிய இன்றியமையாப் பண்டங்களை எளிதில் பெறுவதை உறுதி செய்யத் தேவையான இடங்களில் பகுதி நேர மற்றும் நகரும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பாட்டில் உள்ளன.

**1.7 மாநிலத்தில் 28.02.2023 அன்று உள்ளபடி நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை விவரம்:-**

| வ. எண் | நிறுவனம் | முழுநேரம் | பகுதிநேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | கூட்டுறவு நிறுவனங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ளவை) | 24,058 | 9,644 | 33,702 |
| 2. | இதர கூட்டுறவு நிறுவனங்கள் | 272 | 26 | 298 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,247 | 228 | 1,475 |
| 4. | மகளிர் சுய உதவிக் குழுக்கள் | 441 | 25 | 466 |
| | **மொத்தம்** | **26,018** | **9,923** | **35,941** |

1.8 மேற்கண்ட நியாய விலைக் கடைகளில், 3,670 கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 24,139 கடைகள் வாடகையில்லாக் கட்டடங்களிலும் மற்றும் 8,132 கடைகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் செயல்படும் கடைகளைப் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்படும் புதிய கட்டடங்களிலும், சொந்தக் கட்டடங்களிலும் அரசு அமைத்திட உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.9 முன்மாதிரி நியாய விலைக் கடைகள்** : 75 ஆம் ஆண்டு விடுதலை நாள் விழாவின் அடையாளமாக குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் நியாயவிலைக் கடைப்பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், நியாயவிலைக் கடைகளின் உட்புற மற்றும் வெளிச்சூழலை மேம்படுத்தவும் ஒவ்வொரு மாவட்டத்திலும், 75 நியாய விலைக்கடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் தோற்றம் பொலிவு படுத்தப்பட்டு சுவர்களில் சான்றோர்களின் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. உணவுப் பண்டங்கள் பெற்றிட வருகை தரும் குடும்ப அட்டைதாரர்கள் இளைப்பாற ஏதுவாக நிழற்கூரைகள் மற்றும் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருட்களைப் பாதுகாப்பாக இருப்பு வைத்து எளிதில் விநியோகிக்க ஏதுவாக எவர்சில்வர் கொள்கலன்கள் வழங்கப்பட்டதுடன்,

மூட்டைகளில் உள்ள உணவு தானியங்கள் நனையாமல் இருக்கும் பொருட்டு, அடுக்குச் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. முதற்கட்டமாக, இதுவரை 2,965 நியாய விலைக் கடைகளில் மேற்குறிப்பிட்ட பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள நியாயவிலைக் கடைகளில் 18 மாதங்களுக்குள் இப்பணியினை முடித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இதுவரையில் 5,743 நியாய விலைக் கடைகள் ISO தரச்சான்றினைப் பெற்றுள்ளன. இதில் 3,712 நியாய விலைக்கடைகள் ISO : 9001 தரச்சான்றிதழையும், 2,019 நியாயவிலைக் கடைகள் ISO : 9001 & ISO : 28000 தரச்சான்றிதழ்களையும் மற்றும் 12 நியாய விலைக்கடைகள் ISO : 28000 தரச்சான்றிதழை மட்டும் பெற்றுள்ளன. [ISO : 9001 சான்று தரமேலாண்மைக்காகவும், ISO : 28,000 பாதுகாப்பான

உணவு விநியோகச் சங்கிலி மற்றும் சேமிப்பு முறைக்காகவும் வழங்கப்படுகிறது]

1.10 **மின்னணு குடும்ப அட்டைகள்** : குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரத்தின் மூலம் தங்களுக்கான இன்றியமையாப் பண்டங்களைப் பெறுவதற்கு வசதியாக, துரித குறியீடுடன் (QR code) கூடிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மே 2021 முதல் பிப்ரவரி 2023 வரை, 13,87,656 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

1.11 போலி குடும்ப அட்டைகளைத் தடுக்கும் வகையிலும், உண்மையான பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கும் வகையிலும் குடும்ப அட்டை

தரவில் ஒவ்வொரு பயனாளியின் ஆதார் எண் பெறப்பட்டுச் சேமித்து வைக்கப்படுகிறது. எனினும், ஆதார் எண் எடுக்க இயலாத வயது முதிர்ந்தோர், உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆதார் எண் உள்ளீடின்றியும் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**1.12 மின்னணு குடும்ப அட்டைகளின் வகைகள்** :

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையிலும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இல் உள்ள வரையறைகளின்படியும் மின்னணு குடும்ப அட்டைகள் ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 28.02.2023 நிலவரப்படி, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது.

| வ. எண். | குடும்ப அட்டையின் வகை | வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்கள் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH) | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 96,06,259 |
| 2. | முன்னுரிமை குடும்ப அட்டைகள் – அந்தியோதயா அன்னயோஜனா (PHH-AAY) | 35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 18,65,460 |
| 3. | முன்னுரிமை யற்ற குடும்ப அட்டைகள் (NPHH) | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 1,04,37,007 |
| 4. | முன்னுரிமை யற்ற குடும்ப அட்டைகள் – சர்க்கரை (NPHH-S) | சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் (அரிசி தவிர பிற பொருட்கள்) | 3,82,713 |
| 5. | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – எப்பொருளும் இல்லாதவை (NPHH-NC) | எப்பொருளும் இல்லாதவை | 61,434 |
| **மொத்த மின்னணு குடும்ப அட்டைகள்** | | | **2,23,52,873** |

**1.13 அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகள்** : இந்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி ஏழைகளில் ஏழை என வகைப்படுத்தப்பட்டு தங்களின் அன்றாட உணவுத் தேவைகளுக்காக பொது விநியோகத் திட்டத்தை மட்டுமே சார்ந்து இருக்கும் பயனாளிகள் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டு ஒரு குடும்பத்திற்கு மாதந்தோறும் 35 கிலோ உணவு தானியங்கள் விலையின்றி வழங்கப்படுகின்றன. கூடுதலாக இதர இன்றியமையாப் பண்டங்களும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. 28.02.2023 நிலவரப்படி, **அந்தியோதயா அன்னயோஜனா** பயனாளிகளின் எண்ணிக்கை 18,65,460 ஆகும்.

**1.14 காவல், சிறை மற்றும் வனத்துறை பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்** : சீருடைப் பணியாளர்களின் நலன் கருதி நியாய விலைக்கடைகள் மூலம் துவரம்பருப்பு, சர்க்கரை மற்றும் பாமொலின் எண்ணெய் பொது விநியோகத் திட்ட விலையில் 50 விழுக்காடு குறைத்து கீழ்க்கண்ட விலைகளிலும், இதர இன்றியமையாப் பண்டங்கள் வழக்கமான விலையிலும் வழங்கப்படுகின்றன:-

| | | |
|---|---|---|
| சர்க்கரை | : | ரூ.12.50/கி.கிராம் |
| துவரம் பருப்பு/ கனடா மஞ்சள் பருப்பு | : | ரூ.15.00/கி.கிராம் |
| பாமொலின் எண்ணெய் | : | ரூ.12.50/லிட்டர் |

இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரையிலான சீருடைப் பணியாளர்கள், வனக் காவலர் முதல் வனச் சரகர் வரையிலான வனத் துறைப் பணியாளர்கள் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் முதல்

துணை ஜெயிலர் வரையிலான சிறைப் பணியாளர்களுக்கு முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் “காவல் குடும்ப அட்டைகள்” என நியாய விலைக்கடை விற்பனை முனைய இயந்திரத்தில் வகைப்படுத்தப்பட்டு, இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 28.02.2023 நிலவரப்படி, 63,651 காவலர் குடும்ப அட்டைகள் உள்ளன.

**1.15 அன்னபூர்ணா திட்ட மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டப் பயனாளிகள்** : மாநிலத்தில் வசித்து வரும் 6,033 அன்னபூர்ணா திட்டப் பயனாளிகள் மற்றும் 3,44,128 முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதமொன்றிற்கு முறையே தலா 10 கிலோ மற்றும் 5 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

**1.16 பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் அளவு** : பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. துவரம் பருப்பு மற்றும் பாமொலின் எண்ணெய் ஆகியவை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. குடும்ப அட்டைதாரர்கள் மொத்தமாக எல்லா பொருட்களையும் ஒன்றாகப் பெறலாம் அல்லது அவர்களின் விருப்பப்படி அவ்வப்போதும் பொருட்களை வாங்கலாம். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொருட்களின் வழங்கல் அளவு மற்றும் அவற்றின் விற்பனை விலை விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பொருட்கள் | விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு) | விநியோக அளவு |
|---|---|---|---|
| 1 | அரிசி | விலையில்லை | 01.11.2016 முதல் தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013, நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தில் எவ்வித மாற்றமுமின்றி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி அரிசி குடும்ப அட்டைதாரர்களில் நபர் ஒருவருக்கு (சிறுவர் உட்பட) மாதம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசி பெறுவதற்குத் தகுதியுண்டு. இந்நேர்வில், புதிய திட்டத்தின் காரணமாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் |

<table>
<tr><td></td><td></td><td></td><td>அட்டைதாரர் பெற்று வந்த உணவு தானிய அளவு குறைவில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு குடும்ப அட்டையில் ஒரே நபர் மட்டுமே இருப்பாராயின் அக்குடும்ப அட்டைக்குத் தகுதியான 12 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.
<table>
<tr><td>1 யூனிட்</td><td>12 கிலோ</td></tr>
<tr><td>1.5 யூனிட்கள்</td><td>14 கிலோ</td></tr>
<tr><td>2 யூனிட்கள்</td><td>16 கிலோ</td></tr>
<tr><td>2.5 யூனிட்கள்</td><td>18 கிலோ</td></tr>
<tr><td>3 மற்றும் 4 யூனிட்கள்</td><td>20 கிலோ</td></tr>
</table>
5 யூனிட்கள் மற்றும் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு நபருக்கும், தலா 5 கிலோ வீதம் அதிகப்படுத்தி</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது. |
| 2. | கோதுமை | விலையில்லை | சென்னை நகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு10 கிலோ வீதமும் ஏனைய பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 கிலோ வீதமும் அரிசிக்குப் பதிலாக கோதுமை வழங்கப்படுகிறது. |
| 3. | சர்க்கரை | அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளுக்கு கிலோ ரூ.13.50 மற்ற பயனாளிகளுக்கு கிலோ ரூ.25.00 | அரிசி விருப்ப குடும்ப அட்டைகளுக்கு நபர் ஒன்றுக்கு 500 கிராம் வீதம் அதிகபட்சமாக ஒரு அட்டைக்கு 2 கிலோவும், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | குடும்ப அட்டை ஒன்றுக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக 3 கிலோ சர்க்கரையும் அதிகபட்சமாக 5 கிலோவும் வழங்கப்படுகிறது. |
| 4. | மண்ணெண் ணெய் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.15.00 முதல் ரூ.16.50 வரை | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில், வழங்கப்படுகிறது. |
| 5. | துவரம் பருப்பு | கிலோ ஒன்றுக்கு ரூ.30/- | ஒரு குடும்ப அட்டைக்கு தலா ஒரு கிலோ. |
| 6. | பாமொலின் எண்ணெய் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.25/- | ஒரு குடும்ப அட்டைக்கு தலா ஒரு லிட்டர். |

1.16.1 **அரிசி** : தமிழ்நாட்டில் வசிக்கும் குடும்பங்களுக்கு அரிசியே முதன்மையான உணவாகும். பொதுவிநியோகத்திட்டத்திற்கான அரிசி மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து, இந்திய உணவுக் கழகம் மூலமாக

பெறப்படுகிறது. ஒன்றிய அரசின் தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் விலை விவரம் பின்வருமாறு :

| வ. எண் | வகை | மாத ஒதுக்கீடு (மெ. டன்) | வழங்கல் விலை (கிலோ ஒன்று) |
|---|---|---|---|
| 1 | அந்தியோதயா அன்னயோஜனா (AAY) | 62,508.180 | விலையில்லை (01.01.2023 முதல்) |
| 2 | முன்னுரிமை குடும்பங்கள் (Priority Households) | 1,41,376.420 | விலையில்லை (01.01.2023 முதல்) |
| 3 | ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over) | 92,691.875 | ரூ. 8.30 |
| | மொத்தம் | **2,96,576.475** | |

மேலும், முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு (NPHH அட்டைதாரர்கள்) வழங்குவதற்காக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒரு மாதத்திற்கு 1 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய செலவு மாநில அரசால் முழுமையாக ஏற்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட மொத்த

ஒதுக்கீட்டில் சராசரியாக மாதாந்திர அரிசி நுகர்வு 3.40 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

**1.16.2 சர்க்கரை** : பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யத் தேவைப்படும் சர்க்கரையை தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் மூலமாகவும், வெளிச்சந்தை மூலமாகவும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்கிறது. முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள், முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் சர்க்கரை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய தேவைப்படும் சர்க்கரையின் அளவு மாதத்திற்கு 34,066 மெட்ரிக் டன் ஆகும். இதில் அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளுக்காக 1,864 மெ.டன் அளவிற்கு ஒன்றிய அரசால் கிலோ ஒன்றிற்கு ரூ.18.50 என்று மானிய

விலையில் வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் (AAY) கீழ் உள்ள குடும்ப அட்டை பயனாளிகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.13.50 என்ற விலையிலும் இதர குடும்ப அட்டைகளுக்கு ரூ.25/- என்ற விலையிலும் வழங்கப்படுகிறது. இதன் வித்தியாசத் தொகையைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்கிறது

1.16.3 **கோதுமை** : ஒன்றிய அரசு, மாநிலத்தின் மாதாந்திர கோதுமை ஒதுக்கீட்டை முன்னுரிமை PHH மற்றும் முன்னுரிமை AAY குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் வழங்கும் வகையில், ஜூன் 2022 முதல் 8,532.354 மெட்ரிக் டன் ஆகக் குறைத்துள்ளது எனினும், குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களுடைய உணவு தானிய உரிம அளவில் ஒரு பகுதி அரிசிக்குப் பதிலாக விலையின்றி கோதுமை வழங்கப்படுவதால், கூடுதல்

தேவையை ஈடுசெய்ய இந்திய உணவுக் கழகத்தால் செயல்படுத்தப்படும் வெளிச் சந்தை விநியோகத் திட்டத்தின் கீழ் (உள்நாடு) கோதுமையினைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**1.16.4 மண்ணெண்ணெய்** : ஒன்றிய அரசால் மாதாந்திர மண்ணெண்ணெய் ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் ஒரு எரிவாயு இணைப்புள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விளக்கெரிக்கவும், சமையல் செய்வதற்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த தேவையினை நிறைவு செய்வதற்கு மாதம் 38,165 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஏப்ரல் 2022 முதல் ஒன்றிய அரசால்

ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் 4,520 கிலோ லிட்டராக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீடானது மாநிலத்தின் தேவையில் 12 விழுக்காடு மட்டுமே பூர்த்தி செய்கிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அரசிடம் தொடர்ந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகிறது.

**1.16.5 சிறப்புப் பொது விநியோகத் திட்டம் :** வெளிச்சந்தையில் விற்கப்படும் பருப்பு மற்றும் சமையல் எண்ணெயின் விலையினைக் கட்டுப்பாட்டில் வைக்கவும், சாதாரண மக்களும் ஊட்டச்சத்து மிகுந்த உணவினைப் பெற ஏதுவாகவும், 2007-ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சிறப்புப் பொது விநியோகத்திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் முறையே ஒரு கிலோ ரூ.30/- மற்றும் ஒரு லிட்டர் ரூ.25/- என்ற மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் தோராயமாக 20,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு, 2 கோடி லிட்டர் பாமொலின் எண்ணெய் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்கு தேவைப்படும் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.

**1.16.6 ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்களுக்கு அரிசி வழங்குதல்** : "ரமலான்" மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமியர்கள், "நோன்புக் கஞ்சி" தயார் செய்வதற்காக

அரிசி கிலோ ஒன்றிற்கு ரூ.1/- என்ற மானிய விலையில், மாநிலம் முழுவதும், சிறப்பு ஒதுக்கீடாக மசூதிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2022-ஆம் ஆண்டில் இதற்காக 6,291.679 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2023-ஆம் ஆண்டு நடப்பு ரமலான் மாதத்திலும் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

1.17 **செறிவூட்டப்பட்ட அரிசி** : இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக, ஒன்றிய அரசு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அரிசி செறிவூட்டல் என்பது இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 போன்ற நுண்ணூட்டச் சத்துக்களை அரிசியில் சேர்த்து அதன் ஊட்டச்சத்தினை அதிகரிக்கும்

முறையாகும். செறிவூட்டப்பட்ட அரிசி என்பது செறிவூட்டப்பட்ட அரிசி மற்றும் பட்டை தீட்டப்பட்ட பச்சரிசி / புழுங்கல் அரிசி ஆகியவை 1 : 100 என்ற விகிதத்தில் அடங்கிய கலவையாகும். இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள அனைத்து முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கும் 01.12.2022 முதல் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

**1.18 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அமலாக்கம்** : தமிழ்நாடு அரசு 01.11.2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ஐ நடைமுறைப்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு அந்தியோதயா அன்னயோஜனா குடும்பங்கள் 35 கிலோ உணவு தானியங்களும், முன்னுரிமைக் குடும்பங்களின் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் தலா

5 கிலோ உணவு தானியங்களும் பெறத் தகுதியுடைவர்கள் ஆவர். தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதால் அனைத்து அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அமுல்படுத்துவதற்கு முந்தைய உரிம அளவு உணவு தானியங்கள் அல்லது ஒரு நபருக்கு 5 கிலோ உரிம அளவு உணவு தானியங்கள் இவற்றில் எது அதிகமோ அந்த அளவு உணவு தானியங்களை விலையில்லாமல் வழங்கி வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017-இல் உள்ள வழிகாட்டுதலின்படி, முன்னுரிமைக் குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவ்விவரங்கள் www.tnpds.gov.in என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. விளிம்புநிலை / எளிதில்

பாதிக்கப்படக்கூடியவர்கள் / சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் ஆகியோர் முன்னுரிமை குடும்பப் பயனாளிகளாகத் தேர்வு செய்யப்படுகின்றனர்.

1.18.1 **குறைதீர் அமைப்பு முறை** : தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-இன்படி, பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்திடும் பொருட்டும், பொது விநியோகத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டும், மாவட்ட வருவாய் அலுவலர்கள் / துணை ஆணையாளர்கள், மாவட்ட குறைதீர் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் மாவட்ட குறைதீர் அலுவலரிடமோ அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபரிடமோ தனது குறைகளை எழுத்துப்பூர்வமாகவோ அல்லது குடும்ப அட்டைதாரர்கள்

தமது குறைகளை நியாய விலைக் கடைகளில் பராமரிக்கப்பட்டு வரும் புகார் பதிவேட்டில் பதிவு செய்வதுடன் 1967 மற்றும் 1800-425-5901 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும், "www.tnpds.gov.in" என்ற வலைதள வழியாகவும் தெரிவிக்கலாம்.

**1.18.2 கண்காணிப்புக் குழுக்கள்:** பொது விநியோகத்திட்டத்தினை முறையாகவும். வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்திடவும், அமல்படுத்தும் அலுவலர்களுக்கான பொறுப்பினை உறுதி செய்திடவும், தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017-இன் படி, மாநில, மாவட்ட, வட்ட மற்றும் நியாயவிலைக்கடை அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களின் கூட்டங்கள் உரிய கால இடைவெளியில் நடத்தப்பட்டு, இத்திட்டம்

பயனுள்ள வகையில் செயல்படுவது மற்றும் பொது விநியோகத் திட்டக் குறைபாடுகளைக் களைவதும் உறுதி செய்யப்படுகிறது.

**1.18.3 மாநில உணவு ஆணையம்** : தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013-இன்படி தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் முறையாக அமலாக்கப்படுவதைக் கண்காணிக்கும் பொருட்டு, மாநில உணவு ஆணையம் பிப்ரவரி 2018-இல் அமைக்கப்பட்டது. அவ்வாணையத்தின் ஐந்து ஆண்டு பதவிக்காலம் பிப்ரவரி 2023-இல் முடிவடைந்தது. மாநில உணவு ஆணையத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**1.19 பொது விநியோகத் திட்டத்தை முழுதும் கணினிமயமாக்கல்** : பொது விநியோகத் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு அனைத்துப்

பரிவர்த்தனைகளும் நிகழ்நிலையில் அதற்கென உருவாக்கப்பட்ட மென்பொருள் வழியாக பதிவு, பரிசீலனை, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், புதிய குடும்ப அட்டைகளுக்கான கோரிக்கைகள், நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளில் திருத்தங்கள் மற்றும் குடும்ப அட்டைகள் வழங்குவது தொடர்பான பிற சேவைகள் அனைத்தும் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மறுபுறம், பொது விநியோகச் சங்கிலி மேலாண்மையின் மூலம், கிடங்குகள் முதல் நியாய விலைக் கடை வரை பொருட்களின் நகர்வு முழுதும் கணினிமயமாக்கப்பட்டு, ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கான பொருட்களின் சரியான ஒதுக்கீடு, அதன் முறையான இயக்கம் மற்றும் விநியோகம் ஆகியவை உறுதி செய்யப்பட்டு உள்ளது. ஒவ்வொரு

நியாய விலைக் கடையில் நிறுவப்பட்டுள்ள விற்பனை முனைய இயந்திரத்தைப் பயன்படுத்தி பயோ மெட்ரிக் பதிவு (Biometric) மூலம் அடையாளம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் உண்மையான பயனாளிகளுக்கு முறைகேடுகள் இன்றி பொருட்கள் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பின்வருவன அடங்கும்:

- பொதுமக்கள் புதிய குடும்ப அட்டைகளுக்கு நிகழ்நிலையில் விண்ணப்பம், குடும்ப அட்டைகளில் மாற்றம்/விவரங்கள் புதுப்பிப்பு, விண்ணப்பம் மற்றும் விண்ணப்பங்களின் நிலையைக் கண்காணித்தல் போன்ற சேவைகள்.
- குடும்ப அட்டைகள் / பயனாளிகளின் விவரங்களை முழுமையாகக் கணினிமயமாக்குதல்.

- கணினிமயமாக்கப்பட்ட பொது விநியோகத்திட்டச் சங்கிலி மேலாண்மை.
- நியாய விலைக் கடைகளுக்குப் பொருட்கள் நிகழ் நிலையில் ஒதுக்கீடு செய்தல்.
- கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளில் பொருட்களின் நகர்வினை நிகழ்நிலையில் கண்காணித்தல்.
- குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குடும்ப அட்டை இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையின் பொருட்கள் இருப்பினைக் வலைத்தளம் வாயிலாக காணலாம்.
- ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்களுக்குப் பரிவர்த்தனை விவரங்கள் குறுஞ்செய்தி மூலம்

தெரிவிக்கப்படுவதால் நியாய விலைக் கடைகளில் போலிப் பட்டியலிடுவது தடுக்கப்படுகிறது

- குடும்ப அட்டைதாரர்களின் குறை தீர்க்கும் சேவைகள்
- பல்வேறு காரணங்களால், விரல் ரேகையில் ஏற்படும் மாற்றங்களால், கைவிரல் ரேகை மூலம் ஆதார் அங்கீகாரம் மேற்கொள்ள முடியாத மூத்த குடிமக்கள் / இதர நபர்களின் நலனுக்காக 2023-2024-ஆம் ஆண்டில் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் கருவிழி அடிப்படையிலான ஆதார் அங்கீகாரத்தை கூடுதல் வசதியாக அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**1.19.1 பயோ மெட்ரிக் பதிவு (Biometric) முறையில் பொது விநியோகத் திட்டம்** : தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 ஆதார் தரவுத் தொகுப்பினைப் பயன்படுத்திப்

பயனாளிகளை அங்கீகரிப்பதன் மூலம் விநியோகத்திட்டத்தின் பயன்கள் உண்மையான பயனாளிகளைச் சென்றடைவதை வலியுறுத்துகின்றது. ஆதலால் குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கும் போதே குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண்கள் பெறப்பட்டுத் தகுதியான அனைவருக்கும் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 2023 வரை 99.2% பயனாளிகள் தங்களது ஆதார் எண்ணை மின்னணு குடும்ப அட்டையுடன் இணைத்துள்ளனர். பயோ மெட்ரிக் பதிவு மூலம் குடும்ப உறுப்பினர்களுக்குப் பொருட்கள் வழங்கப்படுவதுடன் தகுதியான பயனாளிகளுக்கு இன்றியமையாப் பண்டங்கள் சென்றடைவதை உறுதி செய்யவும் எந்த நிலையிலும் முறைகேடுகளைத் தவிர்க்கவும் இம்முறை உதவுகிறது. பயோ மெட்ரிக் மூலம் அங்கீகாரம் பதிவாகாத நிலையில்

தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்குப் பதிலி (Proxy) முறையில் இன்றியமையாப் பண்டம் விநியோகம் செய்வதன் மூலம் அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. கருவிழி சரிபார்ப்பின் மூலம் இன்றியமையாப் பண்டம் வழங்கும் நடைமுறை சோதனை அடிப்படையில் சென்னை மற்றும் அரியலூர் மாவட்டங்களில் தலா ஒரு நியாய விலைக் கடையில் 17.10.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் தாங்கள் அனுமதிக்கும் நபர்கள் வாயிலாக நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பண்டங்கள் பெற விரும்பினால் அதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது சராசரியாக 98 விழுக்காடு முதல் 98.5 விழுக்காடு வரை பரிவர்த்தனைகள் பயோ மெட்ரிக் அங்கீகார முறையில் நடைபெற்று வருகின்றன.

**1.20 பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மை** : "ஒரே நாடு ஒரே அட்டை திட்டம்" அக்டோபர் 2020 முதல் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன் படி, வேறு எந்த மாநிலத்தைச் சேர்ந்த முன்னுரிமை அட்டைதாரர்களும் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புக்கோ வேறு காரணத்திற்கோ வந்து தங்கியிருக்கும் போது தாங்கள் விரும்பும் நியாய விலைக் கடையில் உணவு தானியங்களை பயோமெட்ரிக் அங்கீகார அடிப்படையில் பெறலாம். தமிழ்நாட்டிற்குள் வாழ்வோரும் இடம்பெயர்வு காரணமாக வெளியூர்களுக்குச் செல்லும் போது எந்தவொரு அட்டை வைத்திருப்பவரும் பயோமெட்ரிக் அங்கீகாரம் மேற்கொண்டு அவர்கள் விரும்பும் நியாய

விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தங்களுக்குரிய பொருட்களைப் பெறலாம்.

**1.21 பொங்கல் பரிசுத் தொகுப்பு** : 2023-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.1000/-, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீள கரும்பு ஆகியவற்றை அரசு வழங்கியது. இத்திட்டத்திற்கு ரூ. 2429.05 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2.14 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

**1.22 உணவு மானியம்** : அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி மற்றும் கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது. சிறப்பு பொது

**விநியோகத் திட்டப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இன்றியமையாப் பண்டங்கள் கொள்முதல் மற்றும் விநியோகத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் உணவு மானியமாக மாநில அரசு பெரும் செலவினம் மேற்கொள்கிறது. 2023-2024 ஆண்டிற்கு உணவு மானியத்திற்காக அரசு ரூ.10,500 கோடி ஒதுக்கியுள்ளது.**

**1.23 குடும்ப அட்டை தரவுத் தொகுப்பு தூய்மை** : குடும்ப அட்டை தரவுகளைப் புதுப்பிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மே 2021 முதல் பிப்ரவரி 2023 வரை, இறப்பு, இடம் பெயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 3,26,305 குடும்ப அட்டைகளும், 15,78,731 குடும்ப உறுப்பினர் விவரங்களும் குடும்ப அட்டைத் தரவுகளில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

## 1.24 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

**1.24.1. "பட்டினியின்மை"** : அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமொலின் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்கள் மானிய விலையில் அனைத்துக் குடிமக்களுக்கும் வழங்குவதன் மூலம் மாநில அரசு அனைத்து குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்துள்ளதால், உணவுப் பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் பட்டினியின்மை நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

**1.24.2 "கட்டுபடியான விலையில் தூய்மையான எரிபொருள்"**: சமையலுக்குத் தூய்மையான எரிபொருள் அனைத்துக் குடும்பங்களும் கட்டுபடியான விலையில் பெற்றுப் பயன்படுத்தும் வகையில் சமையல் எரிவாயு (LPG)

இணைப்பினை 90 விழுக்காடு குடும்பங்களுக்குச் சேர்த்திட தமிழ்நாடு அரசு வழி வகை ஏற்படுத்தியுள்ளது. 2006ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு 28,94,295 குடும்பங்களுக்கு விலையில்லா எரிவாயு அடுப்புகளும், எரிவாயு உருளைகளுக்கான முன்தொகைகளையும் செலுத்தி எரிவாயு இணைப்புகள் கிடைக்க உதவியது.

## இயல் - 2

## நுகர்வோர் பாதுகாப்பு

2.1 அரசின் நுகர்வோர் பாதுகாப்புக் கொள்கை, நுகர்வோர்கள் தங்கள் தேர்வுகள் குறித்து நன்கு அறிந்த முடிவுகளை எடுப்பதற்கு அவர்களைத் தகுதிப்படுத்துவதையும், நுகர்வோர்கள் குறைதீர் அமைப்புகளை எளிதாக அணுகக்கூடிய வகையில் செயல்படுத்துவதையும், நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கென இத்துறை பின்வருவனவற்றைச் செயல்படுத்தி வருகிறது.

i. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 விதிகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், டிஜிட்டல் உலகில் நுகர்வோர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு ஏற்ப

நியாயமான, சரிசமமான மற்றும் உறுதியான தீர்வுகளை நுகர்வோர் பெற வழிவகை செய்தல்.

ii. சுரண்டப்படுவதிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாக்க, நுகர்வோர் குறைதீர் ஆணையங்களை அணுகாமலே மாற்று வழி மூலம் அவர்களின் குறைகளைத் தீர்வு செய்தல்.

iii. நுகர்வோர்களுக்குச் சேவைகள் வழங்கக்கூடிய அரசுத்துறைகளை மேம்படுத்துவதற்குரிய பரிந்துரைகள் வழங்குதல்.

இந்த நோக்கத்தை அடைய, பின்வரும் இனங்களில் தொடர்ச்சியான பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

2.2 **குடிமக்கள் நுகர்வோர் மன்றம்** : மாணவர்களுக்கு நுகர்வோர் நலன் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட செயல்திறன் மிக்க முறைசாரா அமைப்பாகும்.

தமிழ்நாட்டில் பள்ளி/கல்லூரிகளில் 50 உறுப்பினர்களைக் கொண்ட குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 2000 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் உறுப்பினர்களையும், பள்ளி/கல்லூரி ஆசிரியர்களையும் ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3 **மாநில நுகர்வோர் சேவை மையம்** : மாநில நுகர்வோர் சேவை மையம் 02.11.2009 முதல் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சேவை மற்றும் பொருளில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அது பற்றியும்

ஏமாற்றப்பட்ட நேர்வுகள் ஏதும் இருப்பின் அவை குறித்தும் தெரிவித்திடவும் அதற்குத் தீர்வு காணவும் ஒரு மாற்று குறைதீர் அமைப்பாக மாநில நுகர்வோர் சேவை மையம் அரசால் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இச்சேவை மையத்தினைக் கீழ்க்கண்டவாறு தொடர்பு கொள்ளலாம் :-

| தொலைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி | வலைதள முகவரி |
|---|---|---|
| 044 – 2859 2828 | consumer@tn.gov.in | www.consumer.tn.gov.in |

**2.4 நுகர்வோர் பாதுகாப்பு வலைதளம் :** நுகர்வோர்களுக்கென்றே தனியாக உருவாக்கப்பட்ட www.consumer.tn.gov.in என்ற வலைதளத்தில் நுகர்வோரின் கடமைகள், பொறுப்புகள், வரையறைகள் போன்ற தகவல்கள் தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வலைதளத்தில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு

குறித்த அனைத்து திட்டங்களின் விவரங்களும், நுகர்வோர் உரிமை மீறல் தொடர்பான புகார்களைப் பதிவு செய்யும் விவரங்களும் துறையின் வெளியீடு தொடர்பான தகவல்களும் உள்ளன. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையால் வழங்கப்படும் பிற சேவைகள் தொடர்பான தகவல்களையும் இதில் காணலாம்.

2.5 **தமிழ்நாடு நுகர்வோர் கவசம்** : நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட நுகர்வோர் பாதுகாப்புத்துறை 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' என்ற மாத இதழை வெளியிட்டு வருகிறது. இந்த இதழ் பொதுமக்கள் / நுகர்வோர் இடையே நேரடி தொடர்பில் உள்ள அரசுத் துறைகள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் அனைத்து மாவட்ட நூலகங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**2.6 தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் கொண்டாடுதல்:** ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15-ஆம் நாளை உலக நுகர்வோர் உரிமைகள் நாளாக கொண்டாடுவதற்கும், டிசம்பர் 24-ஆம் நாளை தேசிய நுகர்வோர் பாதுகாப்பு நாளாக கொண்டாடுவதற்கும், அரசால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**2.7 தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி (TNSCWF):** ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் தலா ரூ.50 இலட்சம் (50:50) பங்களிப்புடன் ஒரு கோடி ரூபாய் நிதியில் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதித்தொகுப்பினை நுகர்வோர்களுக்காக உருவாக்கியுள்ளது. மாநில/மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் வசூலிக்கப்படும் அபராதத் தொகையும் கட்டணத்தொகையும் இந்நிதித்

தொகுப்பில் செலுத்தப்படுகின்றன. ஒன்றிய அரசு தொகுப்பு நிதி ஒன்றினை உருவாக்கி அதில் ஒன்றிய மாநில அரசுகளின் பங்களிப்புத் தொகையாக 75:25 என்ற விகிதத்தில் ரூபாய் 10 கோடி (ஒன்றிய அரசு ரூ.7.5 கோடி மற்றும் மாநில அரசு ரூ.2.5 கோடி) ஒதுக்கீடு செய்து, அவை வைப்புத் தொகையாக தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கத்தின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அதற்குரிய வட்டித்தொகை தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி தொகுப்பிற்குச் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது அத்தொகையானது ரூ.20 கோடியாக உயர்த்தப்பட்டு, அதில் மாநில அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.2.5 கோடி மற்றும் ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.7.5 கோடி நிதியானது தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச்சங்கத்தின்

வங்கிக்கணக்கில் வைப்புத் தொகையாக வரவு வைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2.7.1 தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச்சங்கம் (TANSSCOPE)** : நுகர்வோர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளைத் திறம்பட செயல்படுத்திட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை ஆணையாளரைத் தலைவராகவும், அரசு மற்றும் அரசு சாரா துறைகளில் உள்ளவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்படக்கூடிய வகையில் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் எனும் அமைப்பு 2009 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நுகர்வோர்

பாதுகாப்பு, நுகர்வோர் விழிப்புணர்வு, நுகர்வோர் கல்வி மற்றும் இதர நுகர்வோர் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.8 நுகர்வோர் குறைகளுக்கான சட்டபடியான தீர்வுகள்** : 2019 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:-

- தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
- மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்
- மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்

**2.8.1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்**: மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்குத் தலைமை அமைப்பாக தேசிய நுகர்வோர் குறைதீர்

ஆணையம் புது தில்லியில் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் வாங்கிய / பெற்ற பொருளின் மதிப்பு / சேவையின் மதிப்பு ரூபாய் 2 கோடிக்கு மேல் இருந்து அதில் ஏதேனும் குறைபாடிருப்பின் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். மேலும் அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

**2.8.2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்** : மாவட்ட நுகர்வோர் ஆணையங்களுக்குத் தலைமை அமைப்பாக மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் வாங்கிய / பெற்ற பொருளின்/ சேவையின் மதிப்பு ரூபாய் 50 இலட்சத்திற்கு மேல் ரூபாய் 2-கோடி வரை இருந்து அதில் ஏதும்

குறைபாடு இருப்பின் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற / பணியிலிருக்கும் உயர்நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகவும், இரண்டு நீதிமுறை சார் உறுப்பினர்களையும் இரண்டு நீதிமுறை சாரா உறுப்பினர்களையும் (குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்) கொண்ட அமைப்பாகும். மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை போன்று 13 தென் மாவட்டங்களை உள்ளடக்கிய மாநில ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை 11.08.2012 முதல் மதுரையில் செயல்பட்டு வருகிறது. பிப்ரவரி 2023 வரை 31877 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 29047 வழக்குகள் (91 விழுக்காடு) முடிக்கப்பட்டுள்ளன. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர்

குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் தீர்ப்புகளின் மேல் எழும் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களைத் தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும்.

**2.8.3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள்** : எந்த ஒரு நுகர்வோர் தான் வாங்கிய / பெற்ற பொருள் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின், அப்பொருளின் / சேவையின் மதிப்பு ரூபாய் 50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் நிவர்த்தி மனு தாக்கல் செய்யலாம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இன்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் இருக்க வேண்டும். இவ்வாணையம் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி /

வழக்குரைஞரைத் தலைவராகவும் மற்றும் இரண்டு உறுப்பினர்களையும் (குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்) கொண்ட அமைப்பாகும். மாவட்ட ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து பிப்ரவரி 2023 வரை 132723 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 124866 வழக்குகள் (94 விழுக்காடு) முடிக்கப்பட்டுள்ளன.

**2.8.4 வழக்குகளைத் திறம்பட தீர்த்தல்** : நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி மாநில / மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் காலியாக இருந்த 32 தலைவர் மற்றும் 55 உறுப்பினர் பணியிடங்கள் தமிழ் நாடு அரசால் கடந்த ஓராண்டில் நிரப்பப்பட்டுள்ளன. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு முறையே அரசு இணைச் செயலாளர்

மற்றும் அரசு துணைச்செயலாளர் நிலையில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக, மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், உறுப்பினர்கள் தனியாக தீர்ப்புகளை வழங்க உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் உள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிகள், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மாண்புமிகு தலைவர் அவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நுகர்வோர் வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## இயல்- 3

## விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

3.1 உணவுப் பொருள் வழங்கல் ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் "விலைக் கண்காணிப்புப் பிரிவு" இயங்கி வருகிறது. அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் வகைகள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் சில்லரை மற்றும் மொத்த விலைகளை வெளிச்சந்தையில் தினசரி இப்பிரிவு கண்காணித்து வருகிறது. வெளிச்சந்தையில் உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகளின் விலை திடீரென்று உயரும் போது தகுந்த விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதற்கு ஏதுவாக உரிய அறிக்கைகளை உயர் அலுவலர்களுக்கு இப்பிரிவு சமர்ப்பிக்கிறது.

**3.2 தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்** : மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் விலை கண்காணிப்புக் குழு (Price Monitoring Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இன்றியமையாப் பண்டங்கள் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மே 2022-இல் ஏற்பட்ட தக்காளி விலையேற்றத்தின் போது, அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு பண்ணை பசுமைக் கடைகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலமாக மலிவு விலையில் தக்காளி விநியோகம் செய்து விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்தியது. நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் வெளிச்சந்தையில் இன்றியமையாப் பண்டங்கள் விலையேற்றத்தினைக்

கட்டுப்படுத்துவதற்காக ரூ.100 கோடி நிதியில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் நேர்வுகளில், நுகர்வோர் பாதுகாப்புத்துறை வெளிச்சந்தையில் பொருட்களின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த இந்நிதியினைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## இயல் 4

## அமலாக்கம் - குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை

**4.1:** நியாய விலைக்கடைகள் மூலம் பொருட்களை வழங்கி, அனைத்துக் குடிமக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்கள் சில நேர்வுகளில் சமூக விரோதிகளால் கடத்தப்பட்டு பதுக்கப்படுகின்றன. இந்த பதுக்கல் / கடத்தலைத் தடுப்பதற்கு, மாநிலத்தின் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பொருட்களின் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் சட்டங்களான,

(i) இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955

(ii) கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980 ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் அவ்வப்போது அறிவிக்கும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் இத்துறை அமல்படுத்தி வருகிறது.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் 4 காவல் கண்காணிப்பாளர்களையும் (சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டலங்கள்), 12 காவல் துணைக் கண்காணிப்பாளர்களையும், ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் மற்றும் காவலர்களைக் கொண்டு 40 அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது. இவை தவிர, எல்லையோரப் பகுதிகளில் நடைபெறும் பொது விநியோகத் திட்ட பொருட்களின் கடத்தலைத் தடுப்பதற்காக 8 சிறப்பு சுற்றுக் காவல் படைகளும்

இயங்கி வருகின்றன. இந்த அரசு அமைந்த மே 2021-க்குப் பிறகு 2 காவல் கண்காணிப்பாளர்கள், 8 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 6 சார்பு ஆய்வாளர்கள், 24 இதர காவலர்கள், 1 கண்காணிப்பாளர், 1 உதவியாளர், 2 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 1 தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும் மறு பகிர்வு முறையில் 3 புதிய சுற்றுக்காவல் படைகளான பொள்ளாச்சி, திருவள்ளூர் மற்றும் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

4.2 **குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலானாய்வுத் துறையின் செயல்பாடுகள்:** 01.01.2022 முதல் 31.12.2022 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 9,325 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய வழக்குகளில் 67,511 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி, 15,217 லிட்டர் பொது விநியோகத் திட்ட

மண்ணெண்ணெய், மற்றும் 1,492 சமையல் எரிவாயு உருளைகள் (வணிக ரீதியாக பயன்படுத்தியமை) ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், 2,53,034 லிட்டர் கலப்பட டீசல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.6,60,74,492/- ஆகும். மேலும், கடத்தல் / பதுக்கலில் ஈடுபட்ட 9,242 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2,040 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் 80 முக்கிய குற்றவாளிகள் தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜூன் 17, 2019 முதல் மே 6, 2021 வரையிலான காலகட்டம் மற்றும் மே 7, 2021 முதல் மார்ச் 27, 2023 வரையிலான காலகட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய ஒப்பீட்டை அட்டவணையில் காணலாம்.

**17.06.2019 முதல் 06.05.2021 வரையிலும் மற்றும்**

**07.05.2021 முதல் 27.03.2023 வரையிலான கால கட்டத்தில்**

**இத்துறையின் சாதனைகள்**

| **வ. எண்** | **விபரம்** | **17.06.2019 முதல் 06.05.2021 வரை** | **07.05.2021 முதல் 27.03.2023 வரை** |
|---|---|---|---|
| 1 | இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955 -ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 10,810 | 15,867 |
| 2 | கைது செயய்ப்பட்டவர்களின் எண்ணிக்கை | 9,826 | 16,030 |
| 3 | கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்கள் | 2,105 | 3,437 |
| 4 | தடுப்புக் காவல் சட்டம் 1980 கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | 72 | 142 |
| 5 | மொத்தக் கைப்பற்றுகையின் மதிப்பு ( ரூபாயில்) | 6,91,21,612 | 15,24,03,096 |
| **டீசல் வழக்கு சுருக்கம்** | | | |
| 6 | வழக்குகளின் எண்ணிக்கை | 24 | 71 |
| 7 | கைப்பற்றுகை அளவு (லிட்டர்) | 2,02,727 | 8,18,180 |
| 8 | கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்கள் | 28 | 73 |


# இயல் -5

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

**5.1.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிறுவனம் பொது விநியோகத்திட்டத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகிக்கும் உன்னதப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், சட்டப்பிரிவு 25-ன் கீழ் (நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டப் பிரிவு 8) 01.04.2010 அன்று பதிவு செய்யப்பட்டு ”ஆதாயம் இல்லை இழப்பு இல்லை” என்ற கோட்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

**5.2 நிறுவனத்தின் கட்டமைப்பு** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 11 இயக்குநர்களைக்

கொண்ட குழுமக்குழு தலைமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குழுமக்குழுவின் தலைவராக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) அவர்கள் செயலாற்றி வருகிறார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 7,623 நிரந்தரப் பணியாளர்கள், தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், அமுதம் நியாய விலைக்கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளில் பணியாற்றுகின்றனர். 5,272 பருவகால பணியாளர்கள் நேரடி கொள்முதல் நிலையங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களன்றி 4,685 சுமைதூக்கும் தொழிலாளர்களும் 33,259 பருவ கால சுமைதூக்கும் தொழிலாளர்களும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணியாற்றி வருகின்றனர்.


குழும இயக்குநர்கள்
தலைவர்
நிர்வாக இயக்குனர்
இணை நிர்வாக இயக்குனர்
நிதி ஆலோசகர் (ம) முதன்மைக் கணக்குஅலுவலர்
முதுநிலை மேலாளர் (கணக்கு)
முதுநிலை மேலாளர் (தணிக்கை)
மேலாளர் (கணினி)
நிறும செயலர்
விழிப்பு பணி அலுவலர்
பொது மேலாளர் (போக்குவரத்து)
தலைமை கட்டுமான பொறியாளர்
பொது மேலாளர் (பொறியியல்)
மேலாளர் (பொறியியல்)
பொது மேலாளர் (நிர்வாகம்)
பொது மேலாளர் (வாணிபம்)
பொது மேலாளர் (வர்த்தகம்)
பொது மேலாளர் (சந்தை)
முதுநிலை மேலாளர் (தரக்கட்டுப்பாடு)
39 மண்டலங்கள் (முதுநிலை மண்டல மேலாளர்கள் / மண்டல மேலாளர்கள்)
நவீன அரிசி ஆலை (21)
திம்மாவரம்
கள்ளக்குறிச்சி
போளூர்
செய்யாறு
சிதம்பரம்
நெய்வேலி
திருநாகேஸ்வரம்
எருக்கூர்- I
எருக்கூர்- II
சித்தர்காடு
ஆக்கூர்
திருவாரூர்
சுந்தரக்கோட்டை
அம்மன்பேட்டை
பட்டுக்கோட்டை
அதவத்தூர்
மானாமதுரை
கடச்சனேந்தல்
பொள்ளாச்சி
தாழையூத்து
திருக்கோவிலூர்

**5.3 நிறுவனத்தின் செயல்பாடுகள்** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகள்.

அ) பரவலாக்கப்பட்ட கொள்முதல் முறையின் கீழ் இந்திய உணவுக் கழகத்தின் முகவராக தமிழ்நாடு விவசாயிகளிடமிருந்து நெல் மற்றும் கேழ்வரகு கொள்முதல் செய்தல்.

(ஆ) அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமொலின் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் கொள்முதல் செய்து சேமித்து உரிய நியாய விலைக்கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தல்.

(இ) தமிழ்நாடு அரசால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகிற மக்கள் நலத்திட்டங்களுக்கு உணவு

மற்றும் இதர பொருட்களைக் கொள்முதல் செய்து சேமித்து விநியோகம் செய்தல்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் செயல்படும் பல்வேறு அலகுகள்:

i. 16.06 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 308 கிடங்குகள்

ii. 1,475 நியாயவிலைக் கடைகள் (1,247 முழு நேர மற்றும் 228 பகுதி நேர நியாய விலைக் கடைகள்)

iii. 21 நவீன அரிசி ஆலைகள்

iv. 90 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

v. 3 பெட்ரோல் / டீசல் வழங்கும் நிலையங்கள்

vi. 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள்

vii. 4 சமையல் எரிவாயு விநியோகிக்கும் முனையங்கள்

viii. 3,199 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் (26.03.2023 வரை)

ix. 2.86 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 18 மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்பு மையங்கள்.

**5.4 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்:**

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தில் தமிழ்நாட்டின் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 01.10.2002 முதல் நெல் கொள்முதல் செய்து வருகிறது. டெல்டா அல்லாத மாவட்டங்களில் நேரடியாக நெல் கொள்முதல் செய்திட கூட்டுறவுச் சங்கங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மண்டலங்களிலும் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கோரிக்கையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று நேரடி கொள்முதல்

நிலையங்கள் திறக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு கொள்முதல் நடைமுறை, சேமிப்பு மற்றும் நெல் இயக்கம் ஆகியவை சீராக செயல்படுவதற்கு வழிகாட்டு நெறிமுறைகளை 2021-ஆம் ஆண்டு வெளியிட்டு நேரடி கொள்முதல் நிலையங்களின் ஒட்டுமொத்த செயல்பாட்டைக் கண்காணிக்க கீழ்க்கண்டவாறு மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கவும் ஆணையிட்டது.

1. மாவட்ட ஆட்சியர் – தலைவர்
2. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) – கூட்டுநர்
3. இணை இயக்குநர், வேளாண்மை – உறுப்பினர்
4. முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் - உறுப்பினர்

5. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் – உறுப்பினர்

6. விவசாயிகளின் பிரதிநிதிகள்-இருவர்.

மேற்காணும் குழு நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்கான நாள் மற்றும் இடத்தினைத் தேவைக்கேற்ப முடிவு செய்கிறது. மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அந்தந்த மாவட்டங்களில் பெறப்படும் விவசாயிகளின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலித்து நேரடி கொள்முதல் மையங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துகிறது.

**5.5 உழவர் உதவி மையம்** : உழவர்கள் நெல் கொள்முதல் நிலையங்கள் பற்றிய குறைகளைத் தெரிவிக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் உழவர் உதவி மையம்

அமைக்கப்பட்டுள்ளது. இம் மையத்தில் நெல் விற்பனை தொடர்பான குறைகளை விவசாயிகள் பதிவு செய்யலாம். தமிழ்நாட்டில் எந்த பகுதியிலும் உள்ள உழவர்கள் தங்களது குறைகளை உழவர் மைய கட்டணமில்லா தொலைபேசி **1800 599 3540** என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவித்து உரிய பதில் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5.6 **நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்** : நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க அரசு உறுதி எடுத்துள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கான நிரந்தர கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 589 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்கனவே சொந்த

கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மொத்தம் ரூ. 50 கோடி செலவில் தலா 250 மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் கொண்ட 80 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட உள்ளன. மற்ற அரசுத் துறைகளின் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.17 கோடி செலவில் 50 நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படவுள்ளன. உலர்த்தும் களங்கள், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் ஈரப்பதத்தை அளவிற்குள் கொண்டுவர இன்றியமையாத உள்கட்டமைப்புகளில் ஒன்றாகும். இதுவரை 433 உலர்த்தும் களங்கள் கட்டப்பட்டுள்ளன. கே.எம்.எஸ் 2021-2022 ஆம் பருவத்தில் 43.27 இலட்சம் மெட்ரிக் டன் நெல்கொள்முதல் செய்யப்பட்டது.

**5.7 குறைந்தபட்ச ஆதார விலை** : ஒன்றிய அரசு காரிஃப் சந்தைப் பருவம் (கே.எம்.எஸ்) 2022-2023-க்கு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகையுடன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

| **நெல் ரகம்** | **ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதார விலை (குவிண்டால் ஒன்றிற்கு)** | **தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை (குவிண்டால் ஒன்றிற்கு)** | **விவசாயிகளுக்கு வழங்கப்படும் கொள்முதல் தொகை (குவிண்டால் ஒன்றிற்கு)** |
|---|---|---|---|
| சன்ன ரகம் | 2,060/- | 100/- | 2,160/- |
| பொது ரகம் | 2,040/- | 75/- | 2,115/- |

**கடந்த ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகை விவரம்:**

(ஒரு குவிண்டால் ரூபாயில்)

| வ. எண் | கே.எம்.எஸ் | குறைந்தபட்ச ஆதார விலை (ரூபாய்) | | மாநில அரசு ஊக்க தொகை (ரூபாய்) | | மொத்தம் (ரூபாய்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சன்ன ரகம் | பொது ரகம் | சன்ன ரகம் | பொது ரகம் | சன்ன ரகம் | பொது ரகம் |
| 1 | 2011-2012 | 1110 | 1080 | 70 | 50 | 1180 | 1130 |
| 2 | 2012-2013 | 1280 | 1250 | 70 | 50 | 1350 | 1300 |
| 3 | 2013-2014 | 1345 | 1310 | 70 | 50 | 1415 | 1360 |
| 4 | 2014-2015 | 1400 | 1360 | 70 | 50 | 1470 | 1410 |
| 5 | 2015-2016 | 1450 | 1410 | 70 | 50 | 1520 | 1460 |
| 6 | 2016-2017 | 1510 | 1470 | 70 | 50 | 1580 | 1520 |
| 7 | 2017-2018 | 1590 | 1550 | 70 | 50 | 1660 | 1600 |
| 8 | 2018-2019 | 1770 | 1750 | 70 | 50 | 1840 | 1800 |
| 9 | 2019-2020 | 1835 | 1815 | 70 | 50 | 1905 | 1865 |
| 10 | 2020-2021 | 1888 | 1868 | 70 | 50 | 1958 | 1918 |
| 11 | 2021-2022 | 1960 | 1940 | 100 | 75 | 2060 | 2015 |

**5.8 கே.எம்.எஸ். 2022-2023 நெல் கொள்முதல் விவரம்** :

நடைமுறையில் ஆண்டுதோறும் கே.எம்.எஸ் பருவமானது அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதியுடன் முடிவடைகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் கே.எம்.எஸ். 2022-2023 பருவத்தில் 01.09.2022 முதல் நெல் கொள்முதல் பணியினை தொடங்க ஒன்றிய அரசு அனுமதி வழங்கியது.

01.09.2022 முதல் 26.03.2023 வரை மாவட்ட வாரியாக நெல் கொள்முதல் செய்யப்பட்ட விவரம்

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | நெல்கொள்முதல் நிலையங்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | சன்ன ரகம் | பொது ரகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 56 | 7760 | 19710.400 | 21306.120 | 41016.520 |
| 2 | செங்கல்பட்டு | 116 | 6343 | 52097.560 | 3731.480 | 55829.040 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | கோயம்புத்தூர் | 2 | 239 | 1735.160 | 620.360 | 2355.520 |
| 4 | கடலூர் | 221 | 21968 | 68589.840 | 75905.400 | 144495.240 |
| 5 | திண்டுக்கல் | 14 | 967 | 6945.840 | 227.120 | 7172.960 |
| 6 | ஈரோடு | 71 | 10604 | 49132.360 | 29013.320 | 78145.680 |
| 7 | கள்ளக்குறிச்சி | 28 | 2416 | 9890.600 | 5002.080 | 14892.680 |
| 8 | காஞ்சிபுரம் | 95 | 4083 | 32887.880 | 3089.080 | 35976.960 |
| 9 | கன்னியாகுமரி | 10 | 892 | 16.680 | 5108.480 | 5125.160 |
| 10 | கரூர் | 19 | 1973 | 6391.400 | 3892.040 | 10283.440 |
| 11 | மதுரை | 143 | 9967 | 69278.880 | 3737.120 | 73016.000 |
| 12 | மயிலாடுதுறை | 173 | 29369 | 271444.880 | 7880.680 | 279325.560 |
| 13 | நாகப்பட்டினம் | 171 | 39561 | 187777.560 | 79781.040 | 267558.600 |
| 14 | நாமக்கல் | 2 | 143 | 783.480 | 0.000 | 783.480 |
| 15 | பெரம்பலூர் | 25 | 2150 | 6150.640 | 403.760 | 6554.400 |
| 16 | புதுக்கோட்டை | 189 | 15543 | 37923.760 | 63398.040 | 101321.800 |
| 17 | இராமநாதபுரம் | 101 | 1488 | 13673.080 | 48.600 | 13721.680 |
| 18 | ராணிப்பேட்டை | 37 | 3497 | 30498.920 | 618.520 | 31117.440 |
| 19 | சேலம் | 12 | 760 | 3825.840 | 12.920 | 3838.760 |
| 20 | சிவகங்கை | 65 | 10821 | 52353.080 | 371.920 | 52725.000 |
| 21 | தென்காசி | 42 | 2789 | 21255.360 | 2603.200 | 23858.560 |
| 22 | தஞ்சாவூர் | 608 | 93861 | 442082.440 | 272876.720 | 714959.160 |
| 23 | தேனி | 16 | 760 | 4659.400 | 213.680 | 4873.080 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 110 | 10995 | 44228.640 | 20022.200 | 64250.840 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25 | திருநெல்வேலி | 72 | 3619 | 23116.840 | 5460.280 | 28577.120 |
| 26 | திருவள்ளூர் | 73 | 6879 | 57069.120 | 5257.280 | 62326.400 |
| 27 | திருவண்ணாமலை | 55 | 6133 | 19055.360 | 5645.280 | 24700.640 |
| 28 | திருவாரூர் | 522 | 87115 | 442170.320 | 281185.560 | 723355.880 |
| 29 | தூத்துக்குடி | 16 | 417 | 2138.120 | 362.760 | 2500.880 |
| 30 | திருப்பூர் | 18 | 911 | 5333.160 | 794.240 | 6127.400 |
| 31 | வேலூர் | 12 | 1477 | 20249.240 | 166.520 | 20415.760 |
| 32 | விழுப்புரம் | 68 | 3312 | 15805.160 | 7665.400 | 23470.560 |
| 33 | விருதுநகர் | 37 | 3754 | 18335.320 | 2598.720 | 20934.040 |
| | மொத்தம் | **3199** | **392566** | **2036606.320** | **908999.920** | **2945606.240** |

நடப்பு பருவத்தில் 26.03.2023 வரை 3,92,566 விவசாயிகளுக்கு ரூ.6,321.60 கோடி வழங்கப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## 5.9 கொள்முதல் செய்யப்படும் இன்றியமையாப் பொருட்கள்.

**5.9.1 அரிசி** : தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், 2013இன் கீழ் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியினை இந்திய உணவுக் கழகத்தின்

மூலம் பெற்றும் அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியினைப் பெற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கி வருகிறது. தமிழ்நாட்டின் பொது விநியோகத்திட்டத்திற்கும் இதர அரசு நலத்திட்டங்களுக்கும் மாதத்திற்குச் சராசரியாக 3.40 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி தேவைப்படுகிறது. பொதுவிநியோகத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்கிடும் அரிசி போக தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்படுகிறது. இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டைப் போக்க இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 ஆகிய நுண்ணூட்டச் சத்துக்களை

உள்ளடக்கிய செறிவூட்டப்பட்ட அரிசியைப் பொதுவிநியோகத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், மதிய உணவு திட்டம் மற்றும் பிற நலத்திட்டங்களின் கீழ் படிப்படியாக விநியோகிக்க ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், மதிய உணவுத் திட்டம் மற்றும் பிற நலத்திட்டங்களுக்கு 01.10.2020 முதல் 31.03.2022 வரை செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டது. இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 01.12.2022 முதல் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகிக்கப்படுகிறது.

**5.9.2 கோதுமை** : சென்னை மற்றும் மாவட்டத் தலைமை இடங்களில் அரிசி பெறும் அனைத்து குடும்ப

அட்டைதாரர்களுக்கும் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் 10 கிலோ வீதமும், ஏனைய பகுதிகளில் 5 கிலோ வீதமும் நியாய விலைக் கடைகளில் அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன்படி ஒன்றிய அரசு 8,532.354 மெட்ரிக் டன் என்ற அளவில் தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் கோதுமை ஒதுக்கீடு செய்து வருகிறது.

5.9.3. **கேழ்வரகு** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளிடமிருந்து மட்டும் கேழ்வரகினைக் கொள்முதல் செய்து வருகிறது. நடப்பு காரிஃப் சந்தை பருவத்தில் ஜனவரி-2023 முதல் ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ35.78 என கொள்முதல் செய்யப்பட்டு

முதற்கட்டமாக நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வாழ்கின்ற அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விருப்பத்தின் அடிப்படையில் அரிசிக்குப் பதிலாக 2 கிலோ கேழ்வரகு விநியோகிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

கே.எம்.எஸ். 2022-23-இல் கேழ்வரகு கொள்முதல் விவரம்.

| கே.எம்.எஸ் | திறக்கப்பட்ட நேரடி கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை | கொள்முதல் செய்யப்பட்ட ராகி அளவு(மெ.டன்னில்) | ஒரு கிலோவிலை (ரூபாயில்) | பயனடைந்த விவசாயி களின் எண்ணிக்கை | மொத்த தொகை வழங்கப்பட்டது (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 2022-23 (21.03.2023 வரை) | 9 | 442.650 | 35.78 | 281 | 1,58,38,017 |

**5.9.4 சர்க்கரை** : தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் வாயிலாகவும் கூடுதல் தேவை இருப்பின்

திறந்த வெளிச்சந்தையில் இருந்தும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000இன்படி சர்க்கரையைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்து வருகிறது. பொது விநியோகத்திட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 34,066 மெட்ரிக் டன் சர்க்கரை வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 எனவும், பிற குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.25/- என்ற மானிய விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

**5.9.5 சிறப்புப் பொது விநியோகத் திட்டம் :**

வெளிச்சந்தையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கிடும் நோக்குடன் 14.04.2007 முதல்

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமொலின் எண்ணெய் ஆகியவை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்புப் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பின் மாதத் தேவை 20,000 மெட்ரிக் டன், பாமொலின் எண்ணெய் மாதத் தேவை 2 கோடி லிட்டர். அதன்படி, தேவைப்படும் பருப்பு மற்றும் பாமொலின் எண்ணெய் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000இன்படி இணையதள வழியில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ஒரு கிலோ துவரம்பருப்பு ரூ.30/- என்ற விலையிலும் பாமொலின் எண்ணெய் ஒரு

லிட்டர் ரூ.25/- என்ற விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விற்பனை விலை போக கூடுதலாக ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது.

| **விவரம்** | **மாதாந்திர ஒதுக்கீடு பருப்பு (மெ.டன்னில்) மற்றும் பாமொலின் (பாக்கெட்டுகளில்)** | **குடும்ப அட்டைதாரர் களுக்கு வழங்கப்படும் அளவு** | **விற்பனை விலை பருப்பு / கிலோ மற்றும் பாமொலின் பாக்கெட் / லிட்டர்** |
|---|---|---|---|
| துவரம் பருப்பு | 20,000 | 1 கிலோ | ரூ.30/- |
| செறிவூட்டப்பட்ட பாமொலின் எண்ணெய் | 2,00,00,000 | 1 லிட்டர் (910 கிராம்) | ரூ.25/- |

**5.10 நவீன அரிசி ஆலைகள்** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத் திறன் 52,500 மெட்ரிக் டன் ஆகும். 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை

செய்யப்படுகிறது. நவீன அரிசி ஆலைகளில் தரமான அரிசியினை உற்பத்தி செய்வதற்கு கருப்பு அரிசி பிரிக்கும் இயந்திரம் (கலர் சார்ட்டெர் மெஷின்) அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும் நிறுவப்பட்டுள்ளது.

புழுங்கல் அரிசி உற்பத்தி செய்யப்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகளின் உற்பத்தி திறன் விவரம் :-

| வ.எண் | மண்டலங்கள் | நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை | மாதாந்திர உற்பத்தி திறன் (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் | 3 | 7500 |
| 2 | திருவாரூர் | 2 | 5000 |
| 3 | மயிலாடுதுறை | 3 | 7500 |
| 4 | கடலூர் | 1 | 2500 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 1 | 2500 |
| 6 | மதுரை | 1 | 2500 |
| 7 | சிவகங்கை | 1 | 2500 |
| 8 | திருநெல்வேலி | 1 | 2500 |
| 9 | திருவண்ணாமலை | 1 | 2500 |
| 10 | செங்கல்பட்டு | 1 | 2500 |

பச்சரிசி உற்பத்தி செய்யப்படும் நவீன அரிசி ஆலைகளின் உற்பத்தித் திறன் விவரம் : -

| வ. எண் | மண்டலங்கள் | நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை | மாதாந்திர உற்பத்தி திறன் (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை | 1 | 2500 |
| 2 | கடலூர் | 1 | 2500 |
| 3 | கோயம்புத்தூர் | 1 | 2500 |
| 4 | திருவண்ணாமலை | 1 | 2500 |
| 5 | கள்ளக்குறிச்சி | 1 | 2500 |
| 6 | விழுப்புரம் | 1 | 2500 |

**5.11 அரவை ஆலை முகவர்களின் அரவைத் திறன்** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 21 அரவை ஆலைகளின் மாத அரவைத்திறன் 52,500 மெட்ரிக் டன்; 602 அரவை ஆலை முகவர்களின் மாதாந்திர அரவைத் திறன் 9,74,991 மெட்ரிக் டன்; 140 பகுதி நேர அரவை ஆலை முகவர்களின் அரவைத் திறன் 1,45,840 மெட்ரிக் டன். அரிசியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும் கலர் சார்ட்டர் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அரவை ஆலை முகவர்களின் அரவைத் திறன் விவரம் பின்வருமாறு:-

| விவரம் | அரவை முகவர்களின் எண்ணிக்கை | | | அரவைத் திறன் (மெட்ரிக் டன்) | | |
|---|---|---|---|---|---|---|
| | புழுங்கல் அரிசி | பச்சரிசி | மொத்தம் | புழுங்கல் அரிசி | பச்சரிசி | மொத்தம் |
| நிரந்தர அரவை முகவர்கள் | 375 | 227 | 602 | 598756 | 376235 | 974991 |
| பகுதி நேர அரவை முகவர்கள் | 140 | - | 140 | 145840 | - | 145840 |
| **மொத்தம்** | 515 | 227 | 742 | 744596 | 376235 | 1120831 |

மண்டல வாரியாக அரவை ஆலை முகவர்கள் மற்றும் அவர்களின் அரவைத் திறன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | மண்டலங்கள் | தனியார் அரவை ஆலை முகவர்களின் எண்ணிக்கை | அரவைத் திறன் (மெ.டன்) |
|---|---|---|---|
| | | மொத்தம் | மொத்தம் |
| 1 | அரியலூர் | 3 | 7200 |
| 2 | செங்கல்பட்டு | 8 | 11900 |
| 3 | சென்னை (வடக்கு) | 26 | 64100 |
| 4 | கோயம்புத்தூர் | 4 | 2920 |
| 5 | கடலூர் | 8 | 17100 |

| | | | |
|---|---|---|---|
| 6 | தருமபுரி | 75 | 86050 |
| 7 | திண்டுக்கல் | 3 | 3900 |
| 8 | ஈரோடு | 32 | 46015 |
| 9 | கள்ளக்குறிச்சி | 19 | 27575 |
| 10 | காஞ்சிபுரம் | 13 | 24900 |
| 11 | கரூர் | 3 | 6900 |
| 12 | கிருஷ்ணகிரி | 55 | 78200 |
| 13 | மதுரை | 19 | 33075 |
| 14 | மயிலாடுதுறை | 4 | 6600 |
| 15 | நாகப்பட்டினம் | 6 | 9950 |
| 16 | நாமக்கல் | 1 | 3000 |
| 17 | பெரம்பலூர் | 2 | 10000 |
| 18 | புதுக்கோட்டை | 32 | 46250 |
| 19 | இராணிப்பேட்டை | 17 | 24750 |
| 20 | சேலம் | 3 | 3500 |
| 21 | சிவகங்கை | 17 | 20500 |
| 22 | தென்காசி | 23 | 19400 |
| 23 | தஞ்சாவூர் | 38 | 86371 |
| 24 | தேனி | 1 | 1000 |
| 25 | திருநெல்வேலி | 8 | 8000 |
| 26 | திருப்பூர் | 29 | 29605 |
| 27 | திருவள்ளூர் | 51 | 103130 |

| | | | |
|---|---|---|---|
| 28 | திருவண்ணாமலை | 10 | 19050 |
| 29 | திருவாரூர் | 26 | 66340 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 38 | 68810 |
| 31 | தூத்துக்குடி | 2 | 1800 |
| 32 | வேலூர் | 5 | 9975 |
| 33 | விழுப்புரம் | 10 | 10925 |
| 34 | விருதுநகர் | 11 | 16200 |
| | **மொத்தம்** | **602** | **974991** |

## 5.12 உள்கட்டமைப்பு மேம்படுத்துதல்

5.12.1 கிடங்குகள் : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மொத்தம் 308 சேமிப்புக் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 14.37 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 269 கிடங்குகள் கழகத்திற்குச் சொந்தமானதாகும். மீதமுள்ள 1.69 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 39 கிடங்குகள் வாடகை அடிப்படையில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு

நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பயன்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பாதுகாப்பாக சேமித்து வைப்பதை உறுதிப்படுத்தவும், அதன் சேமிப்புக் கொள்ளளவினை மேம்படுத்தவும், அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

மேலும் 8 மாவட்டங்களில் வட்ட செயல்முறைக் கிடங்குகளின் கொள்ளளவை மேம்படுத்தும் வகையில், 28,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 12 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகளை ரூ. 54 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள கிடங்குகளின் விவரம்:-

| வ. எண் | விவரம் | செயல்முறைக் கிடங்குகள் | | கூடுதல் கிடங்குகள் | | மொத்த கிடங்குகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | கொள்ளளவு (மெடன்) | எண்ணிக்கை | கொள்ளளவு (மெடன்) | எண்ணிக் கை | கொள்ளளவு (மெடன்) |
| 1 | சொந்தக் கட்டடம் | 217 | 764318 | 52 | 673555 | 269 | 1437873 |
| 2 | வாடகைக் கட்டடம் (தனியார்) | 12 | 25450 | - | - | 12 | 25450 |
| 3 | வாடகைக் கட்டடம் (கூட்டுறவுத்துறை) | 4 | 11694 | 1 | 2500 | 5 | 14194 |
| 4 | வாடகைக் கட்டடம் (தநா.சேமிப்பு கிடங்கு) | 15 | 46646 | 5 | 33950 | 20 | 80596 |
| 5 | வாடகைக் கட்டடம் (அரசுத் துறை) | - | - | 1 | 8500 | 1 | 8500 |
| 6 | வாடகைக் கட்டடம் (மத்திய சேமிப்புக் கிடங்கு) | - | - | 1 | 40000 | 1 | 40000 |
| மொத்தம் | | 248 | 848108 | 60 | 758505 | 308 | 1606613 |

**5.12.2 நெல் சேமிப்புக் கிடங்குகள்** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 2021-ஆம் ஆண்டு மே மாதம் முதல் மத்திய சேமிப்பு நிறுவனம், தமிழ்நாடு சேமிப்பு நிறுவனம், வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கூட்டுறவுத்துறை மற்றும் சர்க்கரை ஆலைகளுக்குச் சொந்தமான 6.90 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு

கொண்ட 117 கிடங்குகள் வாடகை அடிப்படையில் நெல் சேமிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

| விவரம் | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்) |
|---|---|---|
| நெல்சேமிப்புக் கிடங்கு வாடகை அடிப்படையில் | **117** | **6,90,525** |

**5.12.3 மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்பு மையம்** : கொள்முதல் செய்யப்படும் நெல்லை இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து பாதுகாக்க மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்பு மையங்களை அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். அதன்படி தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் 18 இடங்களில் ரூ.238.08 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியைப் பெற்று 2,86,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

## மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்பு மையங்கள் பற்றிய விவரங்கள்

| வ. எண் | மண்டலங்கள் | இடம் | மெட்ரிக் டன் கொள்ளளவு | மதிப்பிடப்பட்ட தொகை(ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் | சென்னம்பட்டி | 2500 | 2.24 |
| | | திட்டக்குடி | 6000 | 5.60 |
| | | பிள்ளையார்பட்டி | 50000 | 27.27 |
| 2 | திருவாரூர் | திருவாரூர் | 7250 | 4.38 |
| | | புதுக்குடி | 4500 | 4.69 |
| | | முடிகொண்டான் | 7000 | 7.68 |
| 3 | அரியலூர் | தேலூர் | 15000 | 13.62 |
| 4 | புதுக்கோட்டை | அலியாநிலை | 40000 | 35.90 |
| | | துளையானூர் | 12500 | 11.10 |
| 5 | மதுரை | கப்பலூர் | 18000 | 13.20 |
| 6 | சிவகங்கை | பள்ளத்தூர் | 39600 | 29.18 |
| | | ஏனாத்தி | 6000 | 6.34 |
| | | சிப்காட் (மானாமதுரை) | 15000 | 16.25 |
| 7 | திருச்சிராப்பள்ளி | இருங்களூர் | 10000 | 5.55 |
| | | அடவத்தூர் | 14000 | 7.11 |
| 8 | தூத்துக்குடி | மீளாவிட்டன் | 4000 | 4.18 |
| 9 | மயிலாடுதுறை | இடமனல் | 25000 | 31.25 |
| 10 | திருவள்ளூர் | ஊத்துக்கோட்டை (குருபுரம்) | 10000 | 12.50 |
| | | மொத்தம் | 286350 | 238.08 |

**5.13 நியாய விலைக் கடைகள்** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 1,475 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 51 கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 709 கடைகள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும், 715 கடைகள் பிற அரசுத்துறைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் மண்டல வாரியாகச் செயல்படுகின்ற நியாயவிலைக் கடைகள் விவரம்:-

| **வ. எண்.** | **மண்டலங்கள்** | **நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|---|
| | | **முழு நேரக் கடைகள்** | **பகுதி நேரக் கடைகள்** | **மொத்தம்** |
| 1 | அரியலூர் | 2 | - | 2 |
| 2 | சென்னை (வடக்கு) | 324 | - | 324 |
| 3 | சென்னை (தெற்கு) | 143 | - | 143 |
| 4 | கோயம்புத்தூர் | 54 | - | 54 |
| 5 | தர்மபுரி | 32 | 11 | 43 |

| வ. எண். | மண்டலங்கள் | நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் | மொத்தம் |
| 6 | திண்டுக்கல் | 19 | - | 19 |
| 7 | ஈரோடு | 14 | 1 | 15 |
| 8 | காஞ்சிபுரம் | 32 | - | 32 |
| 9 | செங்கல்பட்டு | 2 | - | 2 |
| 10 | கன்னியாகுமரி | 102 | 41 | 143 |
| 11 | கரூர் | 2 | - | 2 |
| 12 | கிருஷ்ணகிரி | 34 | 2 | 36 |
| 13 | மதுரை | 29 | - | 29 |
| 14 | நாமக்கல் | 44 | 1 | 45 |
| 15 | நீலகிரி | 23 | 5 | 28 |
| 16 | பெரம்பலூர் | 1 | - | 1 |
| 17 | புதுக்கோட்டை | 17 | 3 | 20 |
| 18 | இராமநாதபுரம் | 19 | - | 19 |
| 19 | சிவகங்கை | 23 | - | 23 |
| 20 | தென்காசி | 79 | 87 | 166 |
| 21 | திருநெல்வேலி | 46 | 48 | 94 |
| 22 | திருவள்ளூர் | 6 | | |
| 23 | திருவண்ணாமலை | 3 | - | 3 |
| 24 | திருப்பத்தூர் | 22 | - | 22 |
| 25 | திருப்பூர் | 6 | - | 6 |

| வ. எண். | மண்டலங்கள் | நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் | மொத்தம் |
| 26 | திருச்சிராப்பள்ளி | 20 | - | 20 |
| 27 | தூத்துக்குடி | 82 | 26 | 108 |
| 28 | வேலூர் | 36 | - | 36 |
| 29 | விருதுநகர் | 31 | 3 | 34 |
| | **மொத்தம்** | **1247** | **228** | **1475** |

### 5.14 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கும் பிற சேவைகள்

**5.14.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள் :** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அன்றாடம் தேவைப்படும் நுகர்பொருட்களை நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் 90 அமுதம் பல்பொருள் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

**5.14.2 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்:** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கடலூர்

மண்டலத்தில் நெய்வேலியிலும், திருப்பத்தூர் மண்டலத்தில் திருப்பத்தூரிலும், தஞ்சாவூர் மண்டலத்தில் பட்டுக்கோட்டையிலும் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

**5.14.3 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சிராப்பள்ளியிலும், திருவண்ணாமலை மண்டலத்தில் ஆரணியிலும், இராமநாதபுரம் மண்டலத்தில் இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்திலும் சமையல் எரிவாயு விநியோக நிலையங்களை நடத்தி வருகிறது.

**5.14.4 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் பொது விநியோகத்திட்டத்திற்காக செயல்பட்டு வருகின்றன.

| வ. எண். | மண்ணெண்ணெய் வழங்கும் நிலைய விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மொத்த விற்பனை நிலையம் | 02 |
| 2. | மொத்த /சில்லரை விற்பனை நிலையம் | 05 |
| 3. | சில்லரை விற்பனை நிலையம் | 29 |
| **மொத்தம்** | | **36** |

**5.14.5 அம்மா உணவகத்திற்கு உணவுப்பொருட்கள் வழங்குதல்** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசியும் சென்னை மாவட்டத்தில் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமையும் விநியோகித்து வருகிறது.

| வ. எண் | ஆண்டு | அரிசி (மெ.டன்) | கோதுமை (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | 2022-2023 பிப்ரவரி 2023 வரை | 5782.233 | 735.980 |

### 5.15 இதர சேவைகள்

**5.15.1 அரசு உப்பு விற்பனை :** பொது மக்களின் பயன்பாட்டிற்குச் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு (RFF Salt) மற்றும் அயோடின் கலந்த கல் உப்பு (CIS Salt) ஆகிய இரண்டு வகையான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகளில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு (RFF Salt) ஒரு கிலோ பாக்கெட் ரூ.10/-க்கும், அயோடின் கலந்த கல் உப்பு (CIS Salt) ஒரு கிலோ பாக்கெட் ரூ.8/-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**5.15.2 ஊட்டித் தேயிலை மற்றும் டான் டீ :** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம்

பல்பொருள் அங்காடிகளில் ஊட்டித் தேயிலைத் தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.22/- என்ற விலையிலும், டான்டீ தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.21/- என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**5.15.3 ஆவின் நெய் விற்பனை** : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளில் ஆவின் நெய் ரூ.75/- (100 மி.லி) என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**5.16 தரக்கட்டுப்பாட்டுப்பிரிவு** : உணவுப்பொருட்களின் தரத்தினை மிகுந்த கவனமுடன் கண்காணித்து விநியோகிக்கப்படுகிறது. அரசின் தர நிர்ணயப்படி அனைத்து நிலைகளிலும் பகுப்பாய்வு செய்து கொள்முதல் செய்யும் பொருட்களின் தரம் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில்

நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை, கேழ்வரகு, துவரம் பருப்பு, மற்றும் பாமொலின் எண்ணெய் ஆகியவை முறைப்படி சேமிக்கப்படுகிறது. மேலும், அரசின் வழிகாட்டுதல் படி கிடங்கில் பெறப்படும் பச்சரிசியின் கால அளவை ஆய்வு முறையில் கண்டறிந்து புதியதாக அரவை செய்யப்பட்ட பச்சரிசியை மட்டும் கிடங்கினில் இறக்கம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. அக்மார்க் தர நிர்ணயத்தில் கொள்முதல் செய்யப்பட்ட துவரம் பருப்பு மட்டுமே கிடங்கில் இறக்கப்பட்டு பொது விநியோகத்திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

# இயல் - 6

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

6.1 தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அறிவியல் முறையில் சிறந்த கட்டுமானத்தை ஏற்படுத்தி வேளாண் பொருட்களின் தரம் மற்றும் அளவினைப் பாதுகாத்திடும் பொருட்டு விவசாயிகள் மற்றும் விவசாயத்தைச் சார்ந்த வர்த்தக நிறுவனங்களும் பயன்பெறும் வகையில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 02.05.1958 முதல் விவசாய உற்பத்திச் சட்டம் 1956-இன்படி தோற்றுவிக்கப்பட்டு தற்பொழுது சேமிப்புக் கிடங்குகள் சட்டம் 1962-இன்படி செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் முறையே 50 விழுக்காடு பங்குகளைக் கொண்ட இரு பங்குதாரர்கள் ஆவர்.

**6.2 நிறுவன அமைப்பு** : தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் முக்கிய முடிவுகள் அனைத்தும் மாநில அரசின் சார்பில் அதன் தலைவர் உள்ளிட்ட 6 பிரதிநிதிகளும், ஒன்றிய அரசின் சார்பில் 5 பிரதிநிதிகளும் அடங்கிய இயக்குநர் குழுவால் எடுக்கப்படுகின்றன. மண்டல மேலாளர்களின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு சேமிப்புக் கிடங்கும் சேமிப்புக் கிடங்கு மேலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் துணை பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. மேட்டுப்பாளையம், காஞ்சிபுரம், கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு 7 மண்டல அலுவலகங்கள் மூலம் அந்தப் பகுதியில் உள்ள சேமிப்புக் கிடங்குகள் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கண்காணிப்பின் கீழ்

சேமிப்புக் கிடங்குகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட 7 மூத்த நிலை உதவிப் பொது மேலாளர்கள் தலைமை அலுவலகத்தில் உள்ளார்கள். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 269 கிடங்குகள் 60 இடங்களில் 656 பணியாளர்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

6.3 **கிடங்குகளின் கொள்ளளவு** : இந்நிறுவனக் கிடங்குகளில், விவசாயிகள் / வியாபாரிகளின் விவசாய விளைபொருட்கள், விதைகள், உரங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களால் சேமிக்கப்படும் பொருட்களை இருப்பில் வைத்திட தற்சமயம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 7.60 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் 60 இடங்களில் 269 சொந்த சேமிப்புக் கிடங்குகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது கடந்த 2021-22 ஆம் நிதியாண்டில் சராசரியாக 84 விழுக்காடு பயனீட்டு அளவில் ரூ.84.52 கோடி வருமானம் ஈட்டியுள்ளது. மேலும் நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி 2023 வரை இந்நிறுவனத்தின் மாதாந்திர சராசரி பயனீட்டு அளவு **77** விழுக்காடு அளவே இருப்பினும் ரூ.85.71 கோடி வருமானம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தொடர்ந்து அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் பயனீட்டு அளவை அதிகரிக்கும் பொருட்டு சேமிப்புக் கட்டணத்தில் அரசு நிறுவனங்கள், அரசுக் கழகங்கள் மற்றும் முக்கிய தனியார் சரக்கு வைப்பாளர்களுக்குத் தள்ளுபடி சலுகை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

**6.4 தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்** : தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது சேமிப்பு மற்றும் சரக்குகளின் தரத்தினை முறையாகப் பாதுகாத்துச் செயல்பட்டு

வருகிறது. இந்நிறுவனம் நீண்ட அனுபவத்துடன் நவீன தொழில் நுட்பமுறை மூலம் அறிவியல் முறையில் சரக்குகளைப் பாதுகாத்திட தடுப்பு முறை மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விவசாய பொருட்களில் சரக்கு இழப்பு மிகவும் குறைவாக இருக்கும் வகையில் பராமரித்திடவும், இந்நிறுவனம் பணியாளர்களுக்குப் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவது குறித்தும் உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் தொடர்ந்து காலமுறைப்படி சரக்குகளைக் கண்காணித்து பூச்சிகள் தாக்காத வண்ணம் பராமரித்ததின் பயனாக கடந்த 2022-23 ஆம் நிதியாண்டில் சேமிப்பு இழப்பானது அனுமதிக்கப்பட்ட இழப்பான 0.5 விழுக்காட்டினைக் காட்டிலும் குறைந்த பட்ச அளவான 0.03 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**6.5 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்** : தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், பிற நிறுவனங்களிலும் பூச்சி தடுப்புச் சேவைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் பூச்சிக்கட்டுப்பாடுச் சேவைகளான எலித்தொல்லை, கரையான் தொல்லை, கொசுத்தொல்லை மற்றும் கட்டுமானப் பணிக்கு முந்தைய மற்றும் பிந்தைய கரையான் பூச்சித் தடுப்பு பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. **2022-2023** ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் ரூ.66.51 இலட்சம் மதிப்பிற்குப் பூச்சித் தடுப்புப் பணி மேற்கொண்டுள்ளது. அத்தொகையில் ரூ.30.14 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஈட்டிய வருமானத்தில் இந்நிறுவனத்தின் நிகர வருவாய் ரூ.13.26 இலட்சமாகும்.

**6.6 நிதிநிலை செயலாக்கம்** : 2021-2022-ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்தின் மொத்த நிகர இலாபம் ரூ.**22.23** கோடியாகும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு

நிறுவனமானது தமது இரு பங்குதாரர்களான தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கு நிகர இலாபத்தில் 30 விழுக்காட்டில் 50 விழுக்காடு தொகையை 2021-2022ஆம் நிதியாண்டிற்கான ஆதாயப்பங்கின் முன்தொகையாக **ரூ.3.33** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**6.7 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகள் மூலம் கடன் வழங்குதல்**: தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான 60 சேமிப்புக் கிடங்குகளில் வேளாண் பொருட்களைச் சேமிக்கும் 58 சேமிப்புக் கிடங்குகள் அனைத்தும் சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது மாநில அளவில் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைக் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை

ஆணையத்திடம் பதிவு செய்ததற்காக முதல் பரிசைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் விவசாயிகளிடையே மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளின் பயன்பாடு மற்றும் கடன் பெறும் வசதி குறித்துப் பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளது. 2022-2023 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் பல்வேறு சரக்கு வைப்பாளர்களுக்கு, 50 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளை வழங்கி அதனை வங்கிகளில் அடமானம் வைத்ததின் மூலமாக வைப்பாளர்கள் **ரூ.16.71** கோடி கடன் பெற்றுப் பயன்பெற்றுள்ளனர்.

**6.8 கட்டுமானம்** : தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கிடங்கு செயல்திறனை அதிகரிக்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் (2022-2023) நவீன கட்டுமானத்தில் மூன்று புதிய 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகள் முறையே ஒவ்வொன்றும் ரூ.2.4 கோடி

செலவில் புதுக்கோட்டை, திருமங்கலம் மற்றும் இராணிப்பேட்டை சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றன.

**6.9 2022-2023 ஆம் ஆண்டின் சாதனைகள்:**

i. புது தில்லியில் உள்ள கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையம், தேசிய அளவில் அனைத்து மாநில சேமிப்புக் கிடங்கு நிறுவனங்களில் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைப் பதிவு செய்ததற்காக தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு முதல் பரிசை வழங்கியது.

ii. கணினிமயமாக்கல் மூலம் கணக்கியல் உள்ளீடுகள் மற்றும் மின்-ஆளுமை நடைமுறை தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## முடிவுரை

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் அனைத்து மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ததோடு தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உறுதுணை புரிந்துள்ளது. அனைவருக்கும் மேலும் சத்தான உணவை வழங்கிட ஏதுவாக அரிசி மற்றும் துவரம் பருப்புடன் சிறுதானியங்களைக் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். சர்வதேச சிறுதானிய ஆண்டாக 2023 அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் சிறுதானியங்களில் ஒன்றான கேழ்வரகு தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் குடும்ப அட்டைதாரர்களுக்குத் தலா இரண்டு கிலோ அரிசிக்குப் பதிலாக விநியோகிக்கப்படும். பொது விநியோகத் திட்ட அங்காடிகளின் தோற்றத்தைப்

பொலிவுள்ளதாக்கி அதன் வசதிகளைப் பெருக்கி குடும்ப அட்டைதாரர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கும் வகையில் சேவைகள் மேம்படுத்தப்படும். ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்து தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து பாடுபடுவதில் நமது அரசும், துறையும் முனைப்பாக உள்ளன.

**அர. சக்கரபாணி,**

உணவு மற்றும் உணவுப்பொருள்

வழங்கல் துறை அமைச்சர்.




**"ஒரு நெல் மணி கூட மழையில் நனையக் கூடாது"**
**- மாண்புமிகு முதலமைச்சர்**

10 மாவட்டங்களில் 18 இடங்களில் 238 கோடி ரூபாயில் 2.86 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையிட்ட நெல் சேமிப்புத் தளங்கள்



**"கள ஆய்வில் முதல்வர்"**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவாரூரில் நெல் சேமிப்புக் கிடங்கில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.




**இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளும் தொக்கு**
**- திருவள்ளுவர்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் பணிகளை ஆய்வு செய்கிறார்கள்.




புதுதில்லியில் நடைபெற்ற உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்த
மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் உணவுத்துறை அமைச்சர்களின் மாநாடு







**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது**
**- திருவள்ளுவர்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் இயற்கை எய்திய 75 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணிநியமன ஆணைகளையும் 591 பருவகாலப் பணியாளர்களை நிரந்தரமாக்கும் ஆணைகளையும் 12,177 பணியாளர்களுக்குப் பொன்விழா ஊக்கத் தொகையையும் வழங்கினார்கள்.




**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்** **- திருவள்ளுவர்**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் **திரு. உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் பொதுவிநியோகத் திட்டப் பொருள்கள் விநியோகம் செய்வதில் கண் கருவிழி சரிபார்ப்பு முறையை அறிமுகம் செய்தார்கள்.




**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு**

**- திருவள்ளுவர்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2023 பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

“என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலை ஞானத்தால்,
பராக்கிரமத்தால், அன்பால்
உன்னத இமய மலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ!”

அந்நாளை நோக்கி ---------------

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.